02

# நாட்டார் பாடல்கள்

(நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள், இலக்கியங்கள் என்பனபற்றி ஆராயும் இயல் நாட்டுப்புறவியல் எனப்படும். இது இலக்கியம், கலை என இரு பிரிவினுள் அடங்கும்.) நாட்டார் இலக்கியமானது பாடல்கள், கதைகள், விடுகதைகள், கதைப்பாடல்கள் எனப் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. நாட்டார் பாடல்கள், நாடோடிப்பாடல், கிராமியப்பாடல், வாய்மொழிப்பாடல் எனப் பல பெயர்களால் அழைக்கப்படும். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் இப்பாடல்களின் பொருள்களாக அமைந்திருப்பதைக் காணலாம்.

அழுகின்ற குழந்தையைத் தேற்றுவதற்காக அல்லது தூங்க வைப்பதற்காக தாய் பாடும் பாடலைத் தாலாட்டு என்கின்றோம். தால் + ஆட்டு = தாலாட்டு. தால் என்றால் நாக்கு. நாவை அசைத்துப்பாடும் பாடலே தாலாட்டு. அருமருந்தன்ன தன் குழந்தையை பாச உணர்வு பொங்க தாயொருத்தி எவ்வாறு தாலாட்டித் தூங்க வைக்க முயற்சிக்கிறாள் என்பதை இங்கு படித்துச் சுவைக்கலாம்.

## முத்தி விளைஞ்ச முத்து

முத்தே பவளமே - என்
முக்கனியே சக்கரையே,
கொத்து மரிக் கொழுந்தே - என்
கோமளமே கண்வளராய்.

கரும்பே கலகலங்க
கல்லாறு தண்ணி வர
கல்லாற்றுத் தண்ணியிலே
நெல்லா விளைஞ்ச முத்து

முத்திலே முத்து
முதிர விளைஞ்ச முத்து
தொட்டிலிலே ஆணி முத்து
துவண்டு விளைஞ்ச முத்து


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

தேடி எடுத்த முத்து
தேவாதி ஆண்ட முத்து
பாண்டி பதிச்ச முத்து
பஞ்சவர்கள் ஆண்ட முத்து

கொட்டி வைத்த முத்தே
குவித்து வைத்த ரத்தினமே
கட்டிப் பசும்பொன்னே - என்
கண்மணியே நித்திரை போ



## கிரகித்தற் பயிற்சி

1. இப்பாடல் யாரால் யாருக்காகப் பாடப்பட்டுள்ளது?
2. இப்பாடலின் முதற் பகுதியில் தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் உருவகித்துள்ளாள்?
3. ''முத்திலே முத்து முதிர விளைஞ்ச முத்து '' இவ்வடிகளின் சிறப்பை விளக்குக.
4. பாடலின் எவ்வடிகள் உங்கள் மனதைக் கவர்ந்தவை? காரணம் தருக.
5. பாடலில் இடம்பெற்றுள்ள பேச்சு வழக்குச் சொற்களை எழுதி அவற்றுக்கான எழுத்து வழக்கையும் தருக.

நாட்டார் பாடல்களில் தொழிற்பாடல்கள் ஒரு வகை. வேளாண்மை, சிறந்த வருமானத்தையும் மகிழ்ச்சியையும் தரும் தொழிலாக அமைந்திருந்தது. இதற்காக காடுகளை வெட்டி களனியாக்கி, உழவுக்கு வேண்டிய மாடுகளை வளர்த்து பட்டியைப் பெருக்கினர். காட்டிலிருந்து வெட்டிய நல்ல மரங்களிலிருந்து கலப்பைகளைச் செய்தனர். இக் கலப்பையில் மாடுகளைப் பூட்டி உழுவார்கள். இவ்வாறு கலப்பையில் பூட்டுவதே ஏர் பூட்டுதல் எனக் கூறப்பட்டது. காளை மாட்டில் ஏரினைப் பூட்டி உழவு செய்யும் போது பாடப்பட்டுள்ள பாடலொன்று இங்கு தரப்பட்டுள்ளது.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

# ஏர்ப்பாட்டு

ஓரம்போஹ்............... சார்பார்
ஏஎள......................ஹேஎள

சார் பார்த்த கள்ளனடா - செல்லன்
தாய் வார்த்தை கேளாண்டா

பாரக் கலப்பையடா - செல்லனுக்கு
பாரமெத்தத் தோணுதடா

வரம்போ தலகாணி - செல்லனுக்கு
வாய்க்காலோ பஞ்சு மெத்தை

செல்லன் நடந்த நடை - இன்று
சொல்லவொண்ணா அன்னநடை

இந்த நடை தானோ - செல்லனுக்கு
இன்னமுண்டோ அன்னநடை

இந்த நடை நடந்து - செல்லா நாம்
எப்போ கரை சேர்வோமடா

வெள்ளி மதியாணி - செல்லனுக்கு
வெண்கலத்தால் சுள்ளாணி

வெள்ளியினுள் சுள்ளாணி - என் தம்பி செல்லா
உந்தனுக்கு வெண்கலத்தால் மதியாணி

சுள்ளாணிக்குள்ளே - செல்லா ஒரு
சூத்திரத்தை வைத்தாண்டா

சாரை அறிவாண்டா - செல்லன்
சார்ப்பலகை தப்பாண்டா

மூலை வரம்போரம் - செல்லா நீ
முடுகி வளை நல்லகண்டே

ஓடி நட கண்டே - செல்லா நீ
உறுதியுள்ள காலாலே

தள்ளாடித் தள்ளாடி - செல்லன்
சாய்ந்தாடிப் போறாண்டா

தள்ளாதே கண்டே - நீ
சலியாத நல்ல கண்டே

முன்னங்கால் வெள்ளையல்லோ - செல்லனுக்கு
முகம் நிறைந்த சீதேவி



எட்டுக்காலோடே செல்லா - நமக்கு
இருகால் தலை மூன்று

வானம் குடையாமோ - செல்லனுக்கு
மல்லிகைப்பூச் செண்டாமோ

ஆழியிலே போய் முழுகி - செல்லா நீ
அண்டி வந்த தீரன்டா

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. இப்பாடலில் செல்லன் என்ற பதம் யாரைக் குறிக்கின்றது?
2. செல்லனின் சிறப்பு கூறப்படும் பாடலடிகளை எழுதுக.
3. செல்லனுக்கும் உழவனுக்கும் இடையேயான அன்னியோன்னியம் இப்பாடலில் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது.
4. இப்பாடலைப் பாடுபவரின் நோக்கம் யாது?
5. இப்பாடலின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்ற உழவுத் தொழில் சார்ந்த விடயங்களைக் குறிப்பிடுக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

இந்தியாவிலிருந்து உழைப்புக்காக இங்கு வந்தவர்களே மலையக மக்களாவர். இவர்கள் தங்களது வாழ்நிலைகளையும், உணர்வுகளையும், வேதனைகளையும் பாடல்களாய் வெளிப்படுத்தியுள்ளனர். இவை மலையக நாட்டார் பாடல்கள் என அழைக்கப்படுகின்றன. அவ்வாறான பாடலொன்றை இங்கு கற்போம்.

## பழம்

கூனி அடிச்ச மலை
கோப்பிக் கன்னு போட்ட மலை
அண்ணனைத் தோத்த மலை
அந்தா தெரியுதடி

கோப்பி பழுத்துருச்சு
கொண்டு போக நாளாச்சு
சீமை தொரைகளெல்லாம்
சிரிக்கிறாக சன்னலிலே

பழமிருக்கு சாக்குலே தான்
பாத்துக்கடி பத்தரமா
பாசுமாங் கோப்பியிலே
பழமெடுக்க நேரமாச்சு

கங்காணி காட்டு மேலே
கண்டாக்கையா ரோட்டு மேலே
பொடியன் பழமெடுக்க
பொல்லாப்பு நோகுதையா

பழமும் எடுக்கவில்லே
பழைய சோறும் திங்கவில்லே
வீட்டுக்குப் போகவில்லே
வேகுதையா என் மனசு

இடுப்பிலேயும் சாயச் சீலை
இருபுறமும் கோப்பி மரம்
அவசரமா புடுங்குறாளே
அடுத்த வீட்டு ராமாயி

கோப்பி குடிச்சிட்டாராம்
குதுரே மேலே ஏறிட்டாராம்
பச்சக்காடு சுத்தி வர
பத்தே நிமிசம் செல்லும்

பத்து மணி நேரத்திலே
பழம் எடுக்கும் வேளையிலே
பரிகாசம் பேசியல்ல
பவுண் கொடுத்தார் கையிலே
கண்டிருந்த கருத்தக் குட்டி
கணக்கன் கிட்டே சொல்லிட்டாளே

**அரும்பதம்:**

| | | |
|---|---|---|
| தோத்த | - | இழந்த |
| சீமை | - | வெளிநாடு |
| பொல்லாப்பு | - | பிரச்சினை |
| குதிரே | - | குதிரை |

## கிரகித்தற் பயிற்சி

1. இப்பாடலில் குறிப்பிடப்படும் மலை எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?
2. இப்பாடலில் உங்கள் உணர்வுகளைத் தொட்ட வரிகளைக் குறிப்பிடுக. காரணம் தருக.
3. இப்பாடலில் குறிப்பிடப்படும் அதிகாரமிக்க தொழில் புரிவோர் யாவர்?
4. இப்பாடலில் காணப்படும் மலையகப் பேச்சு வழக்குச் சொற்களைத் தருக.

## செயற்பாடு

**குழுவாக இணைந்து பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.**

1. பாடல்களை இசை கூட்டிப் பாடுங்கள்.
2. பின்வரும் தலைப்புகளுள் உங்கள் குழுவுக்குத் தரப்படும் தலைப்பின் கீழ் உள்ளடங்கக் கூடிய பாடல்களைத் தேடித் தொகுத்து ஒப்படையாக முன்வையுங்கள்.

    i. வேடிக்கைப் பாடல்கள்
    ii. விளையாட்டுப் பாடல்கள்
    iii. கதைப்பாடல்கள்
    iv. கடற்றொழிற் பாடல்கள்
    v. மலை நாட்டுத் தொழிற்பாடல்கள்

## இலக்கணம்

### தமிழ் நெடுங்கணக்கு

தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்கள் இருநூற்றுநாற்பத்தேழு (247) ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| ¤ | உயிர் எழுத்துக்கள் | - | 12 |
| ¤ | மெய் எழுத்துக்கள் | - | 18 |
| ¤ | உயிர் மெய் எழுத்துக்கள் | - | 216 |
| ¤ | ஆய்தம் | - | 01 |
| | | | 247 |

உயிர் பன்னிரெண்டும், மெய் பதினெட்டும் தமிழ் மொழிக்கு அடிப்படையான எழுத்துக்கள் ஆகும். இவற்றை முதலெழுத்துக்கள் என்போம்.

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | - | 12 |
| மெய் எழுத்துக்கள் | - | 18 |
| | | 30 முதல் எழுத்துக்கள் |

உயிர் எழுத்துக்களை உச்சரிக்க எடுக்கும் கால அளவைக் கொண்டு அவற்றை **குறில், நெடில்** என இரு வகைப்படுத்துவர்.

- ♈ குறுகிய ஓசை கொண்டு ஒலிப்பது குறில் எனப்படும். இதன் மாத்திரை அளவு **ஒன்று.**
- ♈ நீண்ட ஓசை கொண்டு ஒலிப்பது நெடில் எனப்படும். இதன் மாத்திரை அளவு **இரண்டு.**

| **குறில் (குற்றெழுத்து)** | **நெடில் (நெட்டெழுத்து)** |
|---|---|
| அ | ஆ |
| இ | ஈ |
| உ | ஊ |
| எ | ஏ |
| | ஐ |
| ஒ | ஓ |
| | ஔ |
| 5 | 7 |

**ஐ, ஔ ஆகிய உயிரெழுத்துக்கள், இரண்டெழுத்துக்களைச் சேர்த்து ஒலிப்பதால் அவற்றைக் கூட்டுயிர் அல்லது சந்தியக்கரம் என்போம்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அ | + | இ | = | ஐ |
| அ | + | உ | = | ஔ |

❻ மெய் எழுத்துக்கள் மூன்று வகைப்படும். அவையாவன

- வல்லினம்
- மெல்லினம்
- இடையினம்

வல்லின எழுத்துக்கு மெல்லின எழுத்துகள் இனவெழுத்தாகும். இடையினத்திற்கு இனவெழுத்துகள் இல்லை.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| க் | ங் | ய் |
| ச் | ஞ் | ர் |
| ட் | ண் | ல் |
| த் | ந் | வ் |
| ப் | ம் | ழ் |
| ற் | ன் | ள் |

### ❖ கிரந்த எழுத்துக்கள்

18 மெய் எழுத்துக்களையும் தவிர தற்காலத் தமிழில் கிரந்த எழுத்துக்களும் பயன்படுத்தப்படுகின்றன. வடமொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட எழுத்துவடிவமே கிரந்தமாகும். நீண்ட காலமாகத் தமிழில் வழங்கிவரும் இவ்வெழுத்துக்கள் பிற மொழிச் சொற்களைத் தமிழில் எழுதுவதற்குப் பயன்படுகின்றன.

**உதாரணம்:-**

**ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ, க்ஷ**

| | | |
|---|---|---|
| **ஜ** | - | ஜவ்பர், ஜயவர்தன, ஜனித்ரா, ஜீவராசிகள் |
| **ஸ** | - | ஸர்ப்பம், ஸரஸ்வதி, ஸ்டேஷன் |
| **ஷ** | - | ஷகிலா, ஷர்பான் மனுஷன், பாஷை, விஷ்ணு |
| **ஹ** | - | ஹர்த்தால், ஹரிதரன், ஹரிமா |
| **ஸ்ரீ** | - | ஸ்ரீதர், ஸ்ரீலங்கா |
| **க்ஷ** | - | பக்ஷி |

## பயிற்சி

1. 'முத்தி விளைஞ்ச முத்து' என்ற பாடலின் முதற்பகுதியில் வருகின்ற உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்துக்களை வகைப்படுத்துக; அவற்றினை குறில், நெடிலாகவும் வகைப்படுத்துக.

2. கிரந்த எழுத்துக்களுக்கான உதாரணங்கள் சிலவற்றைத் தேடித் தொகுக்க.

## மொழி வளம்

### பழமொழி

பழமொழிகள் ஒரு சமூகத்தின் பண்பாட்டை விளக்கும். பண்பட்டு வாழ்ந்த வாழ்க்கையின் வெளிப்பாடாக பழமொழிகள் விளங்கும். பழமொழிகளைக் கொண்டே மொழி வளத்தை அறியலாம். அத்துடன் மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறைகளையும் அறியலாம்.

★ காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

★ யதார்த்த வாதி வெகுசன விரோதி

★ பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு

★ தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி

★ மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே

★ வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

★ உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்

★ அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது

★ பொறுத்தார் பூமியாள்வார், பொங்கினார் காடாள்வார்

★ அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

### பயிற்சி

- மேலுள்ள பழமொழிகளில் எவையேனும் ஐந்தினைத் தெரிந்து கருத்துப் புலப்படும் வகையில் வாக்கியங்கள் எழுதுங்கள்.

உங்களது பிரதேசங்களில் பயன்படுத்தப்படும் பழமொழிகளைத் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

நாம் அன்றாடம் பேசப்பயன்படுத்தும் சொற்கள் அனைத்துமே நியமத்தமிழில் அமைவதில்லை. அவற்றுட் சில பேச்சு வழக்கிலும் அமைகின்றன. அவ்வாறான சொற்கள் சில கீழே தரப்படுகின்றன.

| பேச்சு வழக்கு | | எழுத்து வழக்கு |
|---|---|---|
| ஒள்ளுப்பம்<br>எப்பன்<br>இத்துனூண்டு | } | கொஞ்சம்<br>சிறிதளவு |
| கொடாப்பு<br>பெரிய சல்லி | -<br>- | கோழி வளர்க்கும் இடம்<br>ஓய்வூதியப் பணம் |
| நிப்பாட்டு<br>நித்தாட்டு | } | நிறுத்துக |
| மறுகா<br>பேந்து<br>பிறகு<br>அப்பொறம் | } | பின்னர் |
| அங்கிட்டு<br>இங்கிட்டு | -<br>- | அந்தப்பக்கம்<br>இந்தப்பக்கம் |
| போயிட்டு<br>போட்டுவாறன் | } | போய்வருகிறேன் |
| கொக்கணி | - | சுருக்குப் பை |
| செல்லு | - | கூறு, பேசு |
| கிறுகி | - | சுழன்று |
| மய்யல் | | பொழுதுபடுதல் |
| நோம்பு | - | நோன்பு |
| சாயம் / தேத்தண்ணி | - | தேநீர் |
| இரிக்கிற | - | இருக்கிறார் |
| தண்ணி | - | தண்ணீர் |
| எல்லோ | - | அல்லவோ |
| குதுர<br>குதிர | } | குதிரை |

### செயற்பாடு

உங்கள் பிரதேசத்தில் வழக்கிலுள்ள பிரதேச வழக்குச் சொற்களை பட்டியற்படுத்தி , அவற்றை நியமத்தமிழில் எழுதுங்கள்.

## ஆக்கத்திறன்

### கட்டுரை

கட்டுரை என்பது, யாதாயினும் ஒரு பொருள் பற்றிக் கருத்துக்களை உறுதியாகவும் தெளிவாகவும் வாசகருக்குப் பயன்படும் விதத்தில் கட்டுக்கோப்பாக உரைப்பது ஆகும்.

**கட்டுரை எழுதப்படுவதன் நோக்கம்**

* அனுபவங்கள் - எண்ணங்கள் - உணர்ச்சிகளை வெளிப்படுத்தல்.
* ஏதேனும் கருத்துக்களை - கொள்கைகளை மறுத்தல்.
* தம்சார்பான கருத்துக்களை - கொள்கைகளை நிலைநாட்டல்.
* செய்திகளையும் உண்மை நிகழ்ச்சிகளையும் கூறுதல்.
* கற்பனை ஆற்றலை வெளிப்படுத்தல் முதலானவை.

**கட்டுரை எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய படிமுறைகள்**

1. பொருளைத் தெரிந்து கொள்ளுதல்
2. கருத்துக்களைத் தொகுத்துக் கொள்ளுதல்
3. ஒழுங்கு செய்தல் (பந்தியமைத்தல்)
4. கட்டுரை எழுதுதல்

} கட்டுரைச் சட்டகம் அமைத்தல்

**நல்ல கட்டுரையில் காணத்தக்க அம்சங்கள்**

1. தலைப்புக்குப் பொருத்தமான விடயங்களை உள்ளடக்கி இருத்தல்.
2. இலக்கண வழுவின்றி இருத்தல். (எழுத்துவழு, சொல்வழு இன்றி அமைத்தல், நிறுத்தக்குறிகளை உரியவாறு பிரயோகித்தல்)
3. பொருத்தமான அமைப்பைப் பின்பற்றி இருத்தல். (தொடக்கவுரை, தொடருரை, பந்திகள், முடிவுரை என்பன காணப்படல்)
4. கருத்துக்கள் தருக்க ஒழுங்கில் முன்பின் முரணின்றி தொடர்ந்து செல்லுதல்.
5. எழுத்து, உறுப்பு தெளிவாகவும் கவர்ச்சியாகவும் அமைந்திருத்தல்.
6. தொடக்கமும் முடிவும் கவர்ச்சியாக அமைந்திருத்தல்.
7. பொருத்தமான மேற்கோள்கள், பாடல்கள், ஆதாரங்கள், பழமொழிகள் முதலானவை பயன்பட்டிருத்தல்.
8. ஐயந்திரிபுக்கு இடமின்றி அமைதல்.
9. எடுத்த பொருளுக்கு ஏற்ற அளவில் கட்டுரையை எழுதுதல் (வினாத்தாளில் குறிப்பிடப்பட்ட சொல் அளவில் அமைதல்)
10. கூறியது கூறல், மிகைபடக்கூறல், பொருத்தமற்ற வகையில் கூறல் என்பவற்றைத் தவிர்த்திருத்தல்.

11. வாசிப்போரின் கவனத்தைக் கவரக் கூடியதாக உயிர்ப்புடன் அமைந்திருத்தல்.

**கட்டுரை வகைகள் சில**

- கற்பனைக் கட்டுரை
- விளக்கக் கட்டுரை
- தற்சார்புக் கட்டுரை
- வருணனைக் கட்டுரை
- விமர்சனக் கட்டுரை
- வரலாற்றுக் கட்டுரை

**மாதிரிக் கட்டுரைச் சட்டகம்** :- மக்களைப் பாடும் நாட்டார் பாடல்களைப் பேணுவோம்

**முகவுரை** :- நாட்டார் இலக்கியம் பற்றிய அறிமுகம்

**தொடருரை** :-

1. நாட்டார் இலக்கியத்தின் கூறுகள் (பாடல்கள், விடுகதைகள், கதைகள்)
2. நாட்டார் பாடல்களின் பண்புகள் (ஓசைநயம், உயிர்ப்பு, எளிமை, பொருட்செறிவு)
3. நாட்டார் பாடல்களின் வகைகள் [சமூக ரீதியாக ( மீனவர், விவசாயிகள்) வாழ்வியல் ரீதியாக (தாலாட்டு, விளையாட்டு, காதல், ஒப்பாரி) முதலியன]
4. நாட்டார் இலக்கியத்தின் முக்கியத்துவம்
5. நாட்டார் பாடல்களின் இன்றைய நிலை

**முடிவுரை**

6. நாட்டார் பாடல்களைப் பேணவேண்டியதன் அவசியமும் அதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்களும்

## பயிற்சி

01. கீழ்வரும் தலைப்புகள் எந்தவகைக் கட்டுரைக்குள் அடங்கும் என அடையாளப்படுத்துங்கள்.

- எனக்கும் இரண்டு சிறகுகள்
- வயலோரக் கிராமத்தின் எழில்
- சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்போம்
- மாட்டுவண்டி தன் கதை கூறல்
- மகாகவி பாரதியாரும் மகாத்மா காந்தியும்
- எனது ஊரின் கதை
- தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் பார்ப்பதன் விளைவுகள்
- கணினி
- நான் கண்டு களித்த கண்காட்சி
- எனது பாடசாலை

02. மேலுள்ள தலைப்புகளில் ஐந்தினைத் தெரிவு செய்து சட்டகம் தயாரியுங்கள்.

03. தயாரிக்கப்பட்ட சட்டகங்களைத் துணையாகக் கொண்டு கட்டுரைகள் எழுதுங்கள்.